மாலை முரசு

பக்கங்கள் 18 + 09

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 31 திங்கட்கிழமை 16.09.2024 | அதிர்வு 46

தமிழ்ப் பொது வேட்பாளர்

## அரியத்தை ஆதரித்து மேடையேறிய மாவை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை ஆதரித்து மேடையேறிப் பேசினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# சஜித்துக்கே வாக்களியுங்கள்!

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மான அறிக்கையை இன்று வாசித்தார் மாவை

(கே. வசந்தன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்துக்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண் டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தீர்மானம் மிக்க உயர்மட்டக் கலந்துரையாடல் வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்றது. கட்சியின் விசேட குழுவில் அங்கம் வகிப்பவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். 04▶

# தமிழர்கள் திரட்சியாக பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்

## சிறீதரன் எம்.பி. பகிரங்கக் கோரிக்கை




(கே.வசந்தன்)

தமிழர்கள் திரட்சியாகத் தமிழ்ப் பாதுவேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் விசேட குழு கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் 04▶




# ரணிலின் கண்டி பிரசாரத்திலும் வெள்ளமெனத் திரண்ட மக்கள்!

கண்டியில் 'ரணிலால் இயலும்' என்ற தொனிப்பொருளில் பிராசரக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான அநுராத ஜயரத்ன, திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்தை, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.வேலுகுமார், மஹிந்தானந்த அளுத்கமகே, உதயன கிரிந்திகொட, குணதிலக்க ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டோர் உரையாற்றினர்.















# ஜனாதிபதி வேட்பாளர் திலகர் யாழில் சிறீதரனுடன் சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ் யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்டு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டார்.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சிறீ தரன் எம்.பியிடம் அவர் கையளித்தார்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் பலரையும் திலகராஜ் சந்தித்து தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கையளித்து கலந்துரையாடினார்.





# தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு!

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கி யஸ்தர்கள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் இணைந்துகொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் நிறை வேற்று குழு உறுப்பினர் அனுஷ விமலவீர, தேசிய மக்கள் சக்தியின் குண்டசாலை தொகுதி அமைப்பாளர் சிசிர குமார செம்புவத்த மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் விவகார செயலாளர் ஒ.கே. நவாஸ் ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இணைந்து கொண்டனர்.

கண்டியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற 'ரணிலால் இயலும்' என்ற தொனிப்பொருளி லான பிராசரக் கூட்டத்திலேயே மேற் படி மூவரும் ரணிலுடன் இணைந்து கொண்டனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழர்கள்...

தெரிவிக்கும்பாதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்றைய விசேட குழுக் கூட்டத்திலும் மத்திய குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்தப் பாவேதாக தெரிவித்தார்கள். அதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்துள்ளேன்.

சிங்கள தேசிய வேட்பாளர்கள் எவரினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் அரசியல் உரிமை, தன்னாட்சி தொடர்பில் எதுவும் இல்லை. இதனால் நான் அதனை ஏற்றுக்காளெ்ளவில்லை.

தமிழர்கள் திரட்சியாக தங்களின் தேசத்தின் இருப்பையும், தங்களின் அடிப்படை அரசியல் உரிமைகளையும் நிலைநிறுத்துவதற்குத் தமிழ்ப் பாதுவேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.” – என்றார்.

---

## சஜித்துக்கே...

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன் ஆகியோரே இதில் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலின் பின்னர் தமிழரசுக் கட்சியின் தீர்மான அறிக்கை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவால் வாசிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களின் பொருளாதார மேம்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விஞ்ஞாபனங்களில் புதிய அரசமைப்பு உருவாக்குதலும் ஏற்கனவே அரசமைப்பில் உள்ள பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதும் ஆகும். ஒற்றையாட்சி மற்றும் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதனவாகும். அதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் நேரடியாக பேச்சுக்கள் நடைபெற்றன. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாக தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்துடனும் மலையகத் தமிழர்களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும். 13 ஆவது அரசியல் திருத்தம் அரசமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

2002 டிசம்பரில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டது. அக்கோட்பாடு பின்வருமாறு அமைந்தது. இந்த வரலாற்று நிகழ்வு இன்றும் பரிசீலனைக்குரியது. “ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப்பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும். சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் படியும் தமிழர்களாகிய நாங்கள் தனிச்சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம்.

ஒருமக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகின்றோம். 2015 இல் இலங்கை வந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 13இல் இலங்கையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார். “எமது சமூகத்திலுள்ள அனைத்துப் பாகங்களின் அபிலாஷைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது எம்நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்திகளையும் எமதுநாடு உள்வாங்கிக் கொள்ளும். மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் கிராமங்களை இவ்வாறு வலுவூட்டும்போது நாடு மென்மேலும் மேம்படும். கூட்டுச் சமஷ்டியில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன்” – என்று குறிப்பிட்டார்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரசமைப்புக்கான அறிக்கையில் குறிப்பிடப்படும் தமிழ்த் தேசிய இனத்துக்கான அரசியல் தீர்வை அடைவதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் தீர்வு காண வெற்றி பெறும் ஜனாதிபதியுடனும் அரசுடனும் வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம். தமிழ்த் தேச மக்கள் அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதிலும் அந்த இலட்சியத்தை அடைவதற்கும் இடர்களோ முரண்பாடுகளோ ஏற்படாமல் நல்லெண்ணத்துடன், ஒற்றுமை உணர்வுடன் தேர்தலின் போதும், எதிர்காலத்திலும் ஒன்றாக நின்று உழைப்போம் என திடமான தீர்மானத்தைக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நோக்கத்தை நாடளாவிய ரீதியில் செயல்படுத்துவதற்கென நாம் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எமது பெரும் பங்களிப்பை வழங்கி இருந்தோம். ஆனால், பெரும் ஏமாற்றங்களும், வெறுப்பும், வேதனைகளுமே எஞ்சியுள்ளன. இப்போதைய ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்ட மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதுவும் எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளை முழுமையாக உள்ளடக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்கின்றோம். இந்த விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற எமது அடிப்படைக் கோட்பாடுகளில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாத வகையில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் விஞ்ஞாபனம் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு திருப்தியாகக் காணப்படுகின்றது.

எனவே, 2024 செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பின்போது ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்துக்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என அன்புடன் கோருகின்றோம்.” – என்றுள்ளது.

இதேவேளை, இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் விசேட குழு கூட்டத்தில் கலந்துகொண்ட 5 உறுப்பினர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மாத்திரம் குறித்த தீர்மானத்துக்கு இணக்கப்பாடு தெரிவிக்காத நிலையில் ஏனைய ஐவரும் தமது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## அரியத்தை...

தலைவர் மாவை சேனாதிராஜா.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் கூட்டம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இன்று பிற்பகல் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் மேடையேறிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் தீர்மான அறிக்கையை வவுனியாவில் இன்று முற்பகல் நடைபெற்ற கட்சியின் விசேட குழு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்கள் முன்னிலையில் மாவை சேனாதிராஜா வாசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதையும் முழுமையாக முடிக்க லாயக்கற்றவர் இந்த ஜனாதிபதி

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றானாம்!'

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இப்போது அளக்கும் கதைகளைப் பார்க்கும் போது இந்த வானம் ஏறி வைகுண்டம் போகும் கதைதான் நினைவுக்கு வருகின்றது.

ஜனாதிபதியாகத் தாம் பதவியேற்ற நாள் முதல் இப்படித்தான் மாறி, மாறி பலூன் பறக்க விடுவது போல அவர் கதை விட்டு வருகின்றார் என்று இப் பத்தியில் தொடர்ந்து சுட்டி வருகின்றோம்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சி என்று அவ்வப்போது புதுப் புதுக் கதைகளை அவிழ்த்து விடுவார். புதுப் புது முயற்சிகளைத் தொடங்குவார். ஆரவாரம் பண்ணுவார். ஆனால் எதையுமே நேர்த்தியாக முடிக்க மாட்டார். எல்லாவற்றையும் அரை குறையில் குழம்ப விட்டு விடுவார். அல்லது தாமே குழப்பி விடுவார். இதுதான்சிறுபான்மையோர் தொடர்பான அவரது செயன்முறை.

இப்போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் தமக்குப் பெரும் பின்னடைவுதான் மிச்சம் என்ற யதார்த்தப் புறவுண்மையை எடுத்துரைக்கும் புலனாய்வு அறிக்கைகள் கிட்டியமையால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலிருந்தாவது - சிறுபான்மையினரின் பிரதேசங்களில் இருந்தாவது - பிடுங்கக் கூடிய வாக்குகளைப் பிடுங்கி விடுவோம் என்று கருதி அவர்கள் வாழும் பிரதேசங்களை அதிகம் சுற்றிச் சுற்றி வருகின்றார் அவர்.

''வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அப்பிரதேசத்திற்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கி விடும். வடக்கின் அபிவிருத்தியை போன்றே அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன.

''மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பான விடயங்கள் எனது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ளன. மத்திய அரசாங்கத்திற்கு உதவும் வகையில் 9 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத்திட்டம் துரிதப்படுத்தப்படும்.

''தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு என்பன ஸ்தாபிக்கப்படும். ''நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர்வரும் 5 வருடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்''

-இப்படியெல்லாம் வழமை போலக் கயிறு விட்டிருக்கின்றார் அவர். எல்லாம் செய்வோம், செய்வோம் என்பார். செய்பவராக ஆரவாரம் பண்ணுவார். ஆயினும் செய்து முடிக்க மாட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர் ஆரம்பித்த எல்லா முயற்சிகளுமே அரைகுறையில் முடிவுற்றமைதான் நமது அனுபவப் பாடம். பட்டறிவு.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான வழிமுறையைப் பண்ணுவார். பிறகு அரைவாசியில் எல்லாவற்றையும் சொதப்பி விடுவார்.

இப்போதும் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு என்ற தமது தேர்தல் விஞ்ஞாபன வாய்ப்பந்தலை பொருளாதார அபிவிருத்தியோடு முடிச்சுப் போட்டு ஆலாபரணம் பண்ணிகின்றார் தேர்ந்த அரசியல் நரித் தந்திரசாலியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அப்படிச் சேர்த்து முடிச்சுப் போட்டால்தான் பின்னாளில் இலகுவில் ஒப்பேற்றாமல் அதனை குழப்ப முடியும் என்று இப்போதே கணக்குப் போடுகின்றாரோ என்னவோ...!



# இரண்டு மில்லியன் ரூபா நிதியில் கணேசபுரத்தில் அறநெறிப் பாடசாலை

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் அமைத்து வழங்கல்

வவுனியா மாவட்டம் வெங்கல செட்டிக்குளம் பிரதேசத்துக்கு உட்பட்ட கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடம் ஒன்று இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டு, திருமூலர் அறநெறி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

திருமூலர்அறநெறிப்பாடசாலை தலைவர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் விழா மண்டபம்வரை மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து கல்வெட்டு திரை நீக்கம் செய்து வைத்ததுடன் அறநெறி பாடசாலை கட்டடமும் நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மங்கல சுடர்களை பிரதம சிறப்பு விருந்தினர்கள் ஏற்றியதை தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

வரவேற்பு நடனம், வரவேற்பு உரையை தொடர்ந்து கருத்துரைகளை வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை இந்துகலா சார உத்தியோகஸ்தர் சி.சிவகஜன், வெங்கல செட்டிக்குளம் பிர தேச செயலக உத்தியோகத்தர் ச.ஜேந் திரன், சமூக செயற்பாட்டாளர் இ. தாயபாரன் உட்பட பலரும் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மாணவர்களின் நடனம், வில்லிசை, பேச்சு உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அதேவேளை ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் வழங்கிவைக்கப்பட்டன.அறநெறி பாடசாலை மாணவர்களுக்குத் தலா 10 கீலோ வீதம் அரிசியும் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் அறநெறி பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள், சைவ சமய பிரச்சாரகர் தமிழருவி சிவகுமார் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கிரிக்கெட் மைதானம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு ,கல்லடி சிவானந்த தேசிய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற பிக்போஸ் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்ட செயற்றிட்ட அபிவிருத்தி அமைச்சர் அலிசாகிர் மௌலானா மற்றும் கிராமிய அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய மைதானம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்று தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரர்களுக்கு ஏற்ற நல்ல விளையாட்டு மைதானம் இல்லை என்னும் குறை ஏற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏற்பாட்டாளர்கள் இரண்டு அரசியல் பிரமுகர்களிடமும் தங்களுடைய தேவை குறித்த ஒரு மகஜர் ஒன்றையும் உத்தியோக பூர்வமாகக் கையளித்தனர்.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையால் முன்னர் ஒதுக்கப்பட்டிருக்கும் 26 ஏக்கர் கொண்ட ஒரு நிலப்பரப்பை மைதானமாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் கிரிக்கெட் அபிவிருத்திக்கு தங்களுடைய முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்குவர் என்று இரண்டு அரசியல் பிரமுகர்களும் மேடையில் வாக்குறுதி அளித்துள்ளனர்.



# இளைஞர்கள் மத்தியில் நல்லிணக்க பயிற்சிப்பட்டறை

**(ஹஸ்பர்)**

எழுத்தாணி பவுண்டேஷன் நிறுவனம் முன்னெடுத்துவரும் இளைஞர்கள் மத்தியில் மத சுதந்திரம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை திருகோணமலை மல்லிகா விடுதியில் இடம் பெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

எழுத்தாணி பவுண்டேஷன் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார் மற்றும் திட்ட ஆலோசகர் வே.காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# ஈஸ்டர் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய கொலையாளிகள் கைது செய்யப்படுவர்!

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

ஈஸ்டர் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய கொலையாளிகள் கைது செய்யப்படுவர் என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட, தொகுதி, பிரதேச, கிராமிய குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி , மகளின் அணியுடனான விசேட கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது.

களுதாவளை விளையாட்டு மைதானத்துக்கு ஹெலிகொப்டர் மூலம் வருகை தந்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் களுதாவளை கிராமிய குழுத் தலைவர் பார்த்தீபன் வரவேற்று, பின்னர் களுதாவளை கல்லடி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டனர். பின் களுவாஞ்சிகுடியில் இந்த விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர் பிரச்சினைக்கான தீர்வையும், அம்பாறை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான தீர்வையும் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான பிரதான சூத்திரதாரியினையும், அதனோடு தொடர்புடைய சகலரையும் கைது செய்து நீதியை நிலைநாட்டுவதோடு, பிள்ளையான் போன்ற கொலையாளிகளும் கைது செய்ய வேண்டும். வாகரை இல்மனைற் அகழ்வுடன் தொடர்புடைய காணித் திருடர்கள், சட்ட விரோத மண் கடத்தல் கார கும்பல்கள் மட்டக்களப்பிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். இவ்வாறான விசமிகள் கைது செய்யப்பட வேண்டும் .

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூடி ஏகமனதாக தீர்மானித்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்தது.– என்றார்.

இதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதாஸ, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உட்பட அனைத்து பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் காணப்படும் தமிழர்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

ஈஸ்டர் கொலையாளிகள் கைது செய்யப்படுவார்கள். இங்குள்ள மக்களது அவசியப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும். நீதி நிலைநாட்டப்படும் என்று உறுதியளித்தார்.

அதனையும் தாண்டி குறிப்பாக நல்லாட்சி அரசின் காலப் பகுதியில்தான் அமைச்சராகக் கடமையை ஏற்று இருந்த காலப் பகுதியில் முடிக்கப்படாமல் இருக்கும் அனைத்து வீட்டுதிட்ட வேலைகளும் ஒரு மாத கால பகுதிக்குள் நிறைவுறுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அம்பாறையில் மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட மாநகர சபை முதல்வர் சரவணபவன், இலங்கையில் தமிழரசு கட்சியினுடைய மாவட்ட , தொகுதி, மத்திய , பிரதேச, கிராமிய குழு உறுப்பினர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞரணி, மகளிர் அணி பிரதிநிதிகள், இலங்கை தமிழர் கட்சியினுடைய ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.







# ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டு. கூட்டம் கல்லடியில்!

(பழுவூரான்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) மாலை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய தேசிய பாடசாலை மைதானத்தில் சஜித் பிரேமதாஸவின் பங்குபற்றுதலுடன் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.



இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க, ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், முன்னாள் பிரதி அமைச்சர்களான அமீர் அலி, சோ.கணேசமூர்த்தி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டார அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் மட்டக்களப்பு வாள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# கல்முனை வடக்கு பிரதேச போராட்டம் ஒரு இனத்துக்கு எதிரானது கிடையாது!

## ஜனாதிபதி தேர்தல் நிறைவடையும் வரை தற்காலிகமாக நிறுத்தம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய நிர்வாக உரிமைகளை மீட்பதற்காக 174 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட போராட்டமானது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நிறைவடையும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு இருப்பதாக அனைத்து சிவில் சமூக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான அனைத்து சிவில் சமூக ஒன்றிய நிலைப்பாடு மற்றும் வடக்கு பிரதேச செயலக போராட்டம் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்று பாண்டிருப்பு பகுதியில் உள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய நிர்வாக உரிமைகளை மீட்பதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்டுக் காணப்படும் 29 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குள்ளும் வாழும் பொது மக்கள், பொது அமைப்புகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒழுங்கமைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற உரிமைக்கான மக்கள் போராட்டமானது 174 ஆவது நாளை எட்டியது. எமது இலக்கு நோக்கி எமது மக்களுடைய அபிலாசைகளோடு அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த திட்டமிடல்களோடு தொடர்ச்சியாக நடந்து வருகின்றது.

ஆனாலும் எமது மக்கள் போராட்டத்தின் போது கலந்து கொண்டிருந்த பல அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் சார் தீர்மானங்களை முடிவுகளை எடுக்கக்கூடிய நபர்கள் மூலமாகவும் அரசுக்கு பல்வேறு செய்திகளை நாங்கள் வழங்கி இருந்தோம்.

அது மாத்திரமில்லாமல் போராடுகின்ற மக்கள் சார்பாக அன்று நடைபெறுகின்ற போராட்டம் தொடர்பிலான ஆதாரங்களோடும் எமது மக்களுடைய கோரிக்கைகளோடும் அனைத்து சிவில் சமூகக் கட்டமைப்பினுடைய இறப்பர் முத்திரையோடு தொடர்ச்சியாகவும் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி, பிரதமர் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர். மாவட்ட செயலாளர் என பல தரப்பினருக்கும் எமது கோரிக்கைகளை தொடர்ச்சியாக அனுப்பியிருந்தாலும் கூட ஒரு சில பதில்கள் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் அமைச்சின் செயலாளர் போன்றவர்களிடமிருந்தும் மாவட்ட செயலாளரிடமிருந்தும் கிடைத்திருந்தன.

அவற்றில் திருப்தியும் எங்களுக்கு இல்லை அல்லது எங்களுடைய கோரிக்கைகளுக்குரிய பதிலாக அவைகள் அமையவில்லை.

ஆனாலும் இந்த அரசு எமது மக்களுடைய போராட்டத்தை மதிக்கவோ அல்லது எமது மக்களுடைய நியாயமான போராட்டத்துக்தீர்வை வழங்குவதற்கோ முன் வந்திருக்கவில்லை . மாறாகத் தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளது.

இந்தப் போராட்டமானது ஒரு இனத்துக்கோ அல்லது தனி நபர்களுக்கோ எதிரானது கிடையாது. இது ஒரு அரச நிர்வாக ரீதியான கட்டமைப்பை சீர் செய்வதற்கான போராட்டம் மாத்திரமே என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி எனும் அடிப்படையில் எமக்கான தீர்வை வழங்கக் கூடிய உயர் அதிகாரத்தில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்தும் நேரடியாகவும் அரசியல் வாதிகள் ஊடாகவும் ஜனாதிபதியினுடைய கவனத்துக்கு எமது விடயத்தைக் கொண்டு செல்லக் கூடியவர்கள் ஊடாகவும் பல்வேறு முயற்சிகளை நாங்கள் எடுத்திருந்தோம்.

விசேடமாக எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிழக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட 24 மணி நேர செயற்குழு தலைவர் உள்ளிட்டவர்கள் மற்றும் பல தமிழ் சிங்கள அரசியல்வாதிகள் ஊடாகவும் பல முயற்சிகள் எடுத்திருந்தும் எமது வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாத நிலை காணப்படுவதோடு நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டோம்.

இந்த நிலையில் இந்தத் தேர்தலில் வெற்றி பெறப் போகும் வெற்றி பெற்று எதிர்காலத்தில் நாட்டின் ஜனாதிபதியாக வரப் போகின்றவரிடம் நாங்கள் கேட்பது, தயவு செய்து நீங்கள் ஜனாதிபதியாக வருகின்ற பட்சத்தில் எங்களுடைய கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான நிர்வாக ரீதியான அத்தனை விடயங்களையும் தீர்த்துத் தனியான ஒரு பிரதேச செயலகமாக இது தனித்துவமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும்.

இந்த நிலையில் எமது போராட்டம் 175 ஆவது நாளுடன் தேர்தல் சட்ட விடயங்கள், அசௌகரியங்கள் எமது மக்களின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகத் தேர்தல் வரையும் நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்று ஒரு ஜனாதிபதி வருகை தருகின்ற போது அவரிடமும் எங்களுடைய கோரிக்கை மக்கள் சார்பாகக் கொண்டு சேர்க்கப்பட்டு அவர்களுடைய தீர்வு எங்களுக்கு கிடைத்தால் அவர்களுக்கு விசுவாசமாக எங்களுடைய மக்கள் எப்போதும் இருப்போம் என்ற ஒரு விடயத்தையும் கூறுகின்றோம். அவ்வாறு எங்களுக்கான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் தொடர்ச்சியாக எங்களுடைய போராட்டம் தொடரும் என்பதையும் கூறிக் கொள்கின்றோம்.- என்று தெரிவிக்கப்பட்டது.



# கிழக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த பறக்கும் கப்பல் சேவை

## ஆளுநர் நடவடிக்கை; சர்வதேச நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

**(அஸ்லம் எஸ்.மௌலானா, அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பறக்கும் கப்பல் (யுசை-ளூனி) சேவையை ஆரம்பிப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக தெற்காசியாவிலேயே முதன் முறையாக கிழக்கிலங்கையில் பறக்கும் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தத்தில் சர்வதேச Air Space நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் என்பன கைச்சாத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வு வியாழக்கிழமை (12) கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி, மட்டக்களப்பில் மாவட்டத்தில் பாசிக்குடா, அம்பாறை மாவட்டத்தில் அருகம்பே போன்ற சுற்றுலாத் தளங்களின் இயற்கை அழகை ரசிக்கும் வகையிலும் பயணத்தை இலகுபடுத்தும் நோக்கிலும் பறக்கும் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வின்போது சர்வதேச யுசை ளியஉந நிறுவனத்தின் தலைவர் கரேவ் செர்ஜி நிகோலாவிச் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒன்றரை வருடமாக ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்வதை அவதானிக்க முடிந்தது.

அவர் இங்கு யுசை-ளூனி சேவையை ஆரம்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அதற்கு அமைய கடந்த ஒரு மாத காலமாக எமது நிறுவனத்தின் அதிகாரிகள் இங்கு வந்திருந்து ஆய்வுகளை மேற்கொண்டனர். அந்த ஆய்வு அறிக்கையின் படி இவ்வேலைத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது என்பதை அறிந்து அதற்காக முதலீடு செய்ய முன்வத்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா!







**(வி.ரி. சகாதேவராஜா)**

பெரிய நீலாவணையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா இடம்பெற்றுள்ளது.

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடத்தின.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி வை.இராமநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலையக் கல்வி பணிமனையின் இந்து சமய பாடத்ததுக்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர் .

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப் படங்களை சமயப்பற்றாளர் மகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்துக்கு வழங்கி வைத்தார். இதனைப் பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கி வருகின்றனர். ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.




# ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்கல் கருத்தரங்கு!

(றியாஸ் ஆதம்)

ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்குதல் தொடர்பாகக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவர்களது கணவன்மார்களுக்கு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் சனிக்கிழமை (14) இந்த விசேட கருத்தரங்கு நடத்தப்பட்டது.

வளமான பெற்றோர்களிடம் இருந்து ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்குதல் எனும் தொனிப் பொருளில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தலைமையில் மீனோடைக்கட்டு சகி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற, இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் மற்றும் உதவி சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள், அன்னையர் ஆதரவுக் குழு முக்கியஸ்தர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கர்ப்பிணி தாயும் ஊட்டச்சத்தும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் சவால்கள், மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை எனும் மிக முக்கிய தலைப்புக்களில் விளக்கக்காட்சிகளுடன் விரிவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன், தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், உதவி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.



# ஆய்வறிக்கை நூல் வெளியீட்டு விழா

(மஸ்கெலியா செ.தி.பெருமாள்)

மலைய மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை பிரச்சினைகள் ஒரு சட்ட அடிப்படையான விளக்கம் எனும் ஆய்வறிக்கை நூல் வெளியீட்டு விழா ஹட்டனில் நாளை (17) காலை 10 மணிக்கு சிவாலயா மண்டபத்தில் ( ஹட்டன் இந்து மஹா சபைக்கும் மற்றும் மின்சார சபைக்கு அருகில்) பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் எஸ்.டி. கணேஷலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வை மலையக சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார் மேற்கொண்டுள்ளார். அதனை பெருந்தோட்ட அபிவிருத்தி நிறுவனம் (சிப்ஸ்) வெளியிட்டு வைக்கவுள்ளது.

இந்த நிகழ்வில் மலையகத்தைப் பிரதிநித்துவம் செய்யும் 11 மாவட்டங்களை சேர்ந்த மலையாக செயற்பாட்டாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மலையக மாவட்டங்களில் சேர்ந்து பெரும்பாலான மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார் என்று பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் எஸ்.டி. கணேஷலிங்கம் தெரிவித்தார்.







# உளவளத்துணை பயிற்சிச் செயலமர்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கொழும்பு - தெஹிவளையில் இயங்கி வருகின்ற 'ஜவா கம்பஸ்' நிறுவனம் அல்- ஆலிம், ஹாபில்களுக்கு ஒரு நாள் பயிற்சி செயலமர்வு ஒன்றை மருதமுனை பொது நூலக மண்டபத்தில் ஜவா கம்பஸ் நிறைவேற்று பணிப்பாளர் டாக்டர் எம்.எச்.எம். முனாஸிக் தலைமையில் (15) நடத்தியது.

இந்த நிகழ்வில் நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அல்-ஆலிம், ஹாபிழ் பட்டத்தைப் பூர்த்தி செய்த நூற்றுக்கு மேற்பட்ட உலமாக்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஒரு நாள் உளவளத்துணை பயிற்சிச் செயலர்வின் போது, சமூக மட்டத்தில் உளவளத்துணை, உளவியல் ரீதியான பாதிப்புகளால் ஏற்படும் சமூக, பால்நிலை, சமத்துவம் சார் பிரச்சினைகள் தொடர்பில் துறை சார்ந்த வளவாளர்கள் விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில் ஜவா கல்லூரியின் விரிவுரையாளர்களான அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.சித்தி றிஹானா, ஒலுவில் பிரதேச வைத்திய சாலையின் சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர் யூ.கே. எம்.ஏ.ஜின்னா, அட்டாளைச்சேனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் உளவியலாளருமான எம். றிப்னாஸ் ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர். விசேட விரிவுரையை கல்முனை குவாசி நீதிமன்ற நீதிபதி சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம். அமீறுல் அன்சார் நிகழ்த்தினார்.





# நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சிராஸ் மீராசாஹீப் தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

அபிவிருத்திகளையும், மக்களின் வாழ்வாதார திட்டங்களையும் முன்னேற்ற வேண்டுமாக இருந்தால் நாட்டின் ஜனாதிபதியாக சஜித் பிரேமதஸ வரவேண்டும் என்று கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினருமான சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.

சாய்ந்தமருதுதிலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்,

இந்த நாட்டில் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக முதன் முதலில் விருப்பத்தை தெரிவித்த தலைவர் ரவூப் ஹக்கீம்தான் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது நமது நாட்டையும் நாட்டில் உள்ள வளங்களையும் குழி தோண்டிப் புதைத்த கூட்டத்தையும், இனவாதிகளையும் எதிர்வரும் தேர்தலுடன் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் தங்களது லேபலை மட்டும் மாற்றி விட்டு நாட்டை சீரழிப்பதற்கு ஆட்சி பீடம் ஏற நினைக்கிறார்கள். இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதிப்பாடான நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இளைஞர்களும் இதனுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும் சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துயரங்கள் நிறையவே உண்டு.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி ஊழல் மோசடி செய்து நாசகார செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களாகிய நாம் வீதி, வீதியாகவும், வீடு வீடாகவும் சென்று சஜித் பிரேமதாஸவின் டெலிபோன் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும். இதன் மூலம் ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை நாட்டை விட்டு அனுப்ப முடியும்.

இந்தத் தேர்தலில் கொள்ளை கும்பலுடன் இணைந்து இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவைப் படுதோல்வி அடையச் செய்து ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நேசிக்கும் சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை.- என்றார்.




# மன்னாரில் 90 ஆயிரத்து 607 பேர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

## தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான கனகேஸ்வரன் தெரிவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது இம்முறை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று (16) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது வன்னி தேர்தல் தொகுதி மன்னார் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெறவுள்ளது. எமது நிர்வாக தேவை கருதி குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் 25 வலயங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வலயமும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக குறித்த 98 வாக்களிப்புநிலையங்களும்மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.அதற்குள் 7 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். அதனூடாக மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பை பொறுத்தமட்டில் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற 10 ஆயிரத்து 36 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று வாக்களிப்பு இடம்பெற்றது.

இதில் 9 ஆயிரத்து 945 உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொண்டுள்ளனர். 91 பேர் வாக்களிக்கவில்லை. அந்த விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அனைத்து பயிற்சி வகுப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் குறித்து 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனது. குறித்து முறைப்பாடுகள் அனைத்தும் வன்முறையுடன் தொடர்புபட்டதாக இல்லை. சட்ட மிறலுடன் தொடர்பு பட்ட சாதாரண முறைப்பாடகளாகவே அவை கிடைக்கப்பெற்றன. அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு பொது மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் ஒலி பெருக்கி மூலம் கிராமங்கள் ஊடாக தெளிவு படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் வாக்களிக்க தேர்தல் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விசேட தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாக்களிக்க உள்ள விசேட தேவையுடையவர்களுக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் 2 உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். கண் தெரியாதவர்கள் வாக்களிப்பதில் கடினம் என்பதால் உதவியாளர் ஒருவரை அழைத்துச் சென்று வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்குச்சீட்டு நீளமாகக் காணப்படுவதால் பொது மக்கள் இலகுவாக தமது வேட்பாளரை தெரிவு செய்வதில் தாமதம் ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு புள்ளி இடும் சிற்றறைகளின் எண்ணிக்கையை வாக்களிப்பு நிலையங்களில் அதிகரித்துள்ளோம்.மேலும் மன்னார் மாவட்டத்தில் 127 பிரச்சார நிலையங்கள் அனுமதியுடன் இயங்கி வருகின்றன. மாவட்டத்துக்கு இரண்டு பிரதான அலுவலகங்கள் மாவட்ட அலுவலகங்களாக இயங்கி வருகின்றன.

அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றன. தேர்தல் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவு இலக்கமான 023-222 2215 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.- என்றார்.




# காரைதீவு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினரைச் சந்தித்து அவ் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தற்போதுள்ள தேவைகள் மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்ட பிராந்திய பணிப்பாளர் அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட தேவைகளில் அத்தியாவசிய மானவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்டவர்களைப் பணித்துள்ளார்.

சுகாதார மேம்பாடு மற்றும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறதார். இதுபோன்ற கலந்துரையாடல்களை எதிர்காலத்திலும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளார் என்று பிராந்திய பணிப்பாளர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்துகொண்டார்.





# சஜித் பிரேமதாஸவை ஆதரித்து சிராஸ் மீராசாஹிப் பிரச்சாரம்

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று முன்தினம் (15) ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பிரதேசத்தில் வீட்டுக்கு வீடு பிரச்சாரம் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர்கலாநிதி சிராஸ் மீராசாஹிப் உள்ளிட்ட குழுவினர் ஈடுபட்ட னர்.

# விபுலானந்தாவுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(காரைதீவு நிருபர் சகா)

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அபிவிருத்திணைக்களம் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு ஒரு தொகுதி கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி வைத்தது.




விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அதனை நேரில் சென்று பாடசாலை அதிபர் எம். சுந்தரராஜனிடம் வழங்கி வைத்தார்.

இதற்கு இணைப்பாளராக இருந்து செயற்பட்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா மற்றும் பிரதி அதிபர் திருமதி அருந்தவாணி சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# உலக மக்களாட்சி நாள்!

எமது நாட்டில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வாக்களிக்கும் உரிமையானது எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

நமது நாட்டுக்கு உரிய தலைவனை தெரிவு செய்யும் முக்கிய நிலையில் உள்ளோம்.

அதன் அடிப்படையில் மக்களாகிய நாம் எமக்கு பொருத்தமான, சிறந்த தலைமைத்துவம் உள்ள, நாட்டை கட்டியெழுப்பக் கூடிய முறையில் மக்கள் ஒன்றிணைந்து ஒரு தலைவனை தெரிவு செய்ய வேண்டும்.


அதன் அடிப்படையில் இம்முறை 39 வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அவர்களுள் ஒரு பொருத்தமான தலைவரை தெரிவு செய்யும் நிலையில் உலக மக்கள் ஆட்சி தினம் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

மக்களாட்சி அல்லது ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என வரைவிலக்கணம் கொண்டது. மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்ற அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சி வரையறையை கூறியுள்ளார். அதன் அடிப்படையில் அனைத்து உலக ஜனநாயக நாள் செப்ரெம்பர் 15 அன்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

நவம்பர், 8 ,2007 இல் நடந்த ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை கூட்டத்தில் இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மக்களாட்சியை ஆங்கிலத்தில் டெமாக்ரசி (Democracy) என்பர். டெமாக்ரசி என்ற சொல் டெமோஸ் (Demos) கிராட்டோஸ் (Kratos) என்ற இரண்டு சொற்களிலிருந்து தோன்றியது. டெமோஸ் என்பதற்கு மக்கள் என்றும் கிராட்டோஸ் என்பதற்கு அதிகாரம் அல்லது ஆட்சி என்றும் பொருள்.ஜனநாயகத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் அபிவிருத்தி செய்யவும், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் போன்றவற்றுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்கும் முகமாக ஐ.நா. நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப் பொதுத் தீர்மானத்தில் 192 உறுப்பு நாடுகள் அனுமதித்துள்ளன.

பொதுவாக ஒரு நாட்டின் மக்கள் தங்களின் கருத்துக்களைத் தேர்தலின் மூலம் பதிவு செய்து, தங்கள் சார்பாளர்களைத் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளிகள் தனி கட்சியாகவோ அல்லது மற்ற சார் பாகளுடன் சேர்ந்து கூட்டணியாகவோ ஆட்சி செய்வர். உலகளாவிய ரீதியில் எந்த ஒரு தனி மனிதனும் தனது சொந்த அரசியல் தனி மனிதனும் தனது சொந்த அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார நடவடிக்கைகளை தனது வாழ்நாளில் அனுபவிக்கும் உரிமை கொண்டவன் என பொதுச்சபை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மக்களாட்சியின் பண்புகள் எனப் பார்க்கும் போது மக்களாட்சியில் சட்ட சமத்துவம், அரசியல் சுதந்திரம் மற்றும் சட்ட விதிமுறை ஆகியவை முக்கிய அம்சங்களாக அடையாளம் காணப்படுகின்றமை. இந்த நியமங்கள் எல்லா தகுதியுள்ளகுடிமக்களுக்கும் சட்டத்துக்கு முன் சமமாக இருப்பதுடன் சட்ட பூர்வ செயல்முறைகளுக்கு சமமான அணுகலைக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக மக்களாட்சியில் ஒவ்வொரு வாக்குக்கும் சமமான எடை உள்ளது. தகுதி வாய்ந்த குடிமக்களின் சுதந்




திரம் சட்ட பூர்வமான உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியன பொதுவாக ஒரு அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் நலனுக்காக சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள் உள்ளூராட்சி அமைப்புக்களில் செயலாற்றுவதே மக்களாட்சியின் அடிப்படைத் தத்துவம்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்துவிடுவதில்லை. உலகத்தில் பல பகுதிகளிலும் உள்ள அரசியல் கோட்பாடுகளில் மக்களாட்சி என்பது ஒரு சிறந்த ஆட்சி முறை என்று மிகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மக்களாட்சி வெற்றி பெறுவதற்கு என சில காரணிகள் அவசியமாக இருக்க வேண்டும். அவற்றுள் அடிப்படையில் அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல், நேர்மையாக அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய தலைவர்கள் இருத்தல், சுதந்திரமாக செயல்படும் நீதித்துறை இருத்தல் போன்ற பண்புகளை கொண்டிருக்க வேண்டும்.

மக்களாட்சியின் கோட்பாடுகள் எனப் பார்க்கும்போது, உயர்ந்த கட்டுப்பாடு அதாவது அதிகாரத்தின் மிகக் குறைந்த அளவிலான இறையாண்மை, அரசியல் சமத்துவம் தனிநபர்களும் நிறுவனங்களும் உயர்மட்ட கட்டுப்பாட்டின் முதல் இரண்டு கொள்கைகள் மற்றும் அரசியல் சமத்துவம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல்களை மட்டும் கருத்தில் கொள்ளும் சமூகம் போன்றவற்றை கூற முடியும். மக்களாட்சி முறையில் நேரடி மக்களாட்சி, மறைமுக மக்களாட்சி என இவ்வகைகள் உள்ளன. நேரடி மக்களாட்சி எனும் போது அரச செயல்பாடுகளில் மக்கள் நேரடியாக பங்கேற்கின்றனர். அரசின் தீர்மானங்களை உருவாக்கும் வகையில் மக்கள் நேரடியாக தொடர்பு கொண்டிருந்தனர் மறைமுக மக்களாட்சி முறையில் மக்கள் அவர்களின் சார்பாகவும் ஆட்சி அமைத்து அரசாங்கத்தை நடத்துகின்றனர்.

இவைகளை நாம் பொதுவாக பார்த்தோமானால் அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் ,சமூக உரிமைகள், கலாசார உரிமைகள், குடிமை உரிமைகள், சமூக பாதுகாப்புக்கான உரிமை, மதம் மற்றும் அரசியல் நம்பிக்கைகளில் உட்பட்டவைகளில் கருத்துக் கொண்டிருக்கும் உரிமை, வாக்களிப்பதற்கான உரிமை, அரசியல் பங்கேற்பதற்கான உரிமை, வேலைக்கான உரிமை வேலையைத் தெரிவு செய்யும் உரிமை, சொத்து வைத்திருப்பதற்கான உரிமை, அறிவியல் முன்னேற்றங்களின் பலன்களை அனுபவிப்பதற்கான உரிமை என பல்வேறு பிரிவினைகளின் கீழ் வருகின்றன.

இந்த உரிமைகள் எல்லாம் எங்கிருந்து நமக்கு கிடைக்கின்றன எனக் கொஞ்சம் ஆழமாக உற்று நோக்கினோம் என்றால் மக்கள் ஆட்சி அடிப்படை வேர்களைப் புரிந்து கொள்ள முடியும்.

சமத்துவமும் சுதந்திரமும் மக்களாட்சி இரண்டு முக்கிய அடிப்படை தத்துவங்களாக இருப்பின் மக்களாட்சி தத்துவத்தின் படி சட்டத்தின் முன் எல்லோரும் சமமானவர்கள் அதே வழி சுதந்திரம் என்பது ஒரு மனிதனின் சுய முன்னேற்றத்துக்கு அவசியமானது. இவ்விரண்டையும் ஒரு நாடு கொண்டிருந்தாலும் சகிப்புத்தன்மை இல்லாவிட்டால் ஜனநாயகம் என்பது வெற்றி பெற முடியாது. சமூகத்தில் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு .

**சி.கதீசனா ,**
ஊடகக் கற்கைகள்,
யாழ் .பல்கலைக்கழகம்.



# விரிசல்!

## மதுவிலக்குப் பேச்சால் எது வந்தாலும் எதிர்கொள்ளத் தயார் என்கிறார் திருமா!

'மதுவிலக்கைப் பேசுவதால் கூட்டணியில் விரிசல், பின்னடைவு ஏற்பட்டாலும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்." என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

'நாங்கள் எல்.கே.ஜி., தான். பா.ம.க., பி.ஹெச்.டி.தான். இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தி.மு.க. கூட்டணியில் தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளது. அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. மதுவிலக்கு என்பது அனைவருக்குமான பிரச்சினை. மது ஒழிப்பு மாநாட்டில் அனைவரும் பங்கேற்கலாம் என அழைப்பு விடுத்துள்ளோம். இந்த மாநாட்டில் பங்கேற்பதும், பங்கேற்காமல் இருப்பதும் அவரவர்கள் விருப்பம்.

நிறைய கசப்பான அனுபவங்களால் சேர்ந்து செயல்பட முடியாத நிலைக்கு பா.ம.க.வினர்தான் எங்களைத் தள்ளி விட்டனர். அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. பா.ம.க.வை இழிவுபடுத்துவது எங்கள் நோக்கம் இல்லை. மதுவிலக்கு மாநாடு குறித்து பல்வேறு விமர்சனங்கள் வருகின்றன. எங்கள் நோக்கத்தில் எவ்வித களங்கமும் இல்லை. களங்கம் ஏற்படுத்தப் பலரும் நினைக்கிறார்கள். அதை நாங்கள் பொருட்படுத்த விரும்பவில்லை.



மதுக்கடைகளுக்கு எதிராக அனைவரும் சேர்ந்து குரல் எழுப்புவார்கள். மதுக்கடைகள் இருக்கக்கூடாது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. மதுக்கடைகள் இருக்கட்டும் என எந்த அரசியல் கட்சியும் சொல்ல வாய்ப்பு இல்லை. மதுவால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. மதுவுக்கு எதிராக அனைவரும் ஒருமித்த கருத்தில் இருக்கும்போது ஏன்? சேர்ந்து குரல் கொடுக்கக்கூடாது. அனைவரும் ஒன்று சேர்ந்தால் நிச்சயம் மதுக்கடைகளை மூட முடியும்.

மதுவிலக்கைப் பேசுவதால் கூட்டணியில் விரிசல், பின்னடைவு ஏற்பட்டாலும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

அதிகாரத்தில் பங்கு என்ற பதிவை தி.மு.க. மிரட்டியதால் நீக்கியதாகக் கூறினார்கள். தற்போது தி.மு.க. கூட்டணியில் இருப்பதாகவே நான் நம்புகிறேன்.


மதுவிலக்கைப் பேசுவதால் எந்த விளைவுகள் வந்தாலும் எதிர்கொள்ளத் தயார்" என்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தொல் திருமாவளவன் இன்று மதியம் சந்திக்கவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோல்ப் விளையாடச் சென்றவேளை

# துப்பாக்கிச்சூடு!

## பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார் டொனால்ட் டிரம்ப்




புளோரிடா கோல்ப் கிளப்பில் விளையாட டிரம்ப் சென்ற வேளை, அங்கு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும், ட்ரம்ப் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார்.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் களமிறங்கியுள்ளார். இதையடுத்து, தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், புளோரிடா கோல்ப் கிளப்பில் விளையாட டிரம்ப் சென்றார். அப்போது அங்கு திடீரென துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. இதையடுத்து, அதிகாரிகள் டிரம்பை அங்கிருந்து பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர்.

மேலும், அதிபர் வேட்பாளர் டிரம்ப் பாதுகாப்பாக உள்ளார் என அவரது கட்சி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. ஏற்கனவே, பென்சில்வேனியாவில் நடந்த பிரசாரத்தில் டிரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரு மாதங்களில் டிரம்ப் மீது நடத்தப்பட்ட 2ஆவது தாக்குதல் முயற்சி இது என்பதால் அமெரிக்காவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பக்கங்கள் 09

கனடா முரசு

திங்கட்கிழமை 16/09/2024

## அல்பர்ட்டா விபத்தில் 2 இளைஞர்கள் சாவு

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கிழக்கு அல்பர்ட்டாவில் ஒரு சாலையில் ஏற்பட்ட விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர் 04






# ‘எயார் கனடா’ விமானிகளின் பணி நிறுத்த முஸ்தீபு வாபஸ்!

## நிறுவனத்துடன் கடைசி நேரத்தில் இணக்க உடன்பாடு எட்டப்பட்டது

**எயார் கனடா விமானிகளின் பணிபுறக் கணிப்பு போராட்டம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**எயார் கனடா விமான சேவை நிறுவனத்திற்கும் விமானிகளுக்கும் இடையில் கடைசி நேரத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த போராட்டம் தவிர்க்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கனடாவின் மிகப் பெரிய விமான சேவை நிறுவனமான எயார் கனடா நிறுவனம் நேற்றைய தினம் விமானிளுடன் இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொண்டதாக அறிவித்துள்ளது.**

எயார் கனடா விமான சேவை நிறுவனத்தில் சுமார் 5200 விமானிகள் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய இணக்கப்பாட்டின்படி விமான பயணங்கள் ரத்து செய்யப்பட மாட்டா எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமான சேவை நிறுவனத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள தவறினால் எதிர்வரும் புதன்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் குதிக்க விமானிகள் திட்டமிட்டிருந்தனர்.





# தமிழரசு காட்டிய வழியில் சஜித்துக்கு வாக்களிக்க கோருகிறது கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நடைபெற இருக்கும் சனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமாதாசா அவர்களுக்கு வாக்களியுங்கள் என கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக அந்த அமைப்பு நேற்று கனடாவில் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பான எமது உறவுகளே!

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவை கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமனதுடன் வரவேற்கிறது. செப்ரெம்பர் 21 இல் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் களம் முற்றிலும் மாறுபட்டும் வேறுபட்டும் காணப்படுகிறது.

(1) இம்முறை தேர்தல் களத்தில் இனவாதம் தலைதூக்கவில்லை.

(2) தமிழ்மக்கள் எதிர்நோக்கும் தேசியச் சிக்கல்கள் தொடர்பாக மூன்று முக்கிய கட்சிகளும் ஏறக் குறைய ஒரே மாதிரியான தீர்வை முன்வைத்துள்ளன.

(3) இதுவரை காலமும் இன - மத - போரியல், அரசியல் உத்திகள் மூலம் சிங்கள மக்களை உசுப்பேத்தி ஆட்சியைக் கைப்பற்றிய பொதுசன முன்னணி தனது செல்வாக்கை இழந்துள்ளது.

இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணம் 2022 இல் தென்னிலங்கையில் வெடித்த அறகாலய போராட்டம்தான். அந்தப் போராட்டத்தின் போது ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக இன - மத - மொழி வேற்றுமைகளைக் கடந்து காலிமுகத் திடலில் தீவிரமாகப் போராடினார்கள்.

சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கம், இமாலயப் பிரகடனத்தைத் தொடர்ந்து இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மக்களுக்கு இடையே உள்ள இன, மொழி, மத வேற்றுமையைக் கடந்து மக்களை ஓரளவு ஒன்று திரட்டியது.

புதிய அரசமைப்பு மற்றும் தேசிய

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
Canada Tamil National Alliance

| President | Secretary | Treasurer |
|---|---|---|
| Mr. V.Thangavelu | Mr. T.Babu Vasanthakumar | Mr. N.Nageswaran |
| 416-281-1165 | 416-998-2284 | 647-609-5392 |
| athangav@sympatico.ca | athavannews@gmail.com | Nada.nages@gmail.com |

இனநெருக்கடியுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து மூன்று தலைவர்களும் தங்களது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். தேசிய இன நெருக்கடியுடன் தொடர்புடைய சிக்கல்களைப் பொறுத்தவரை, மூன்று தலைவர்களும் பெரும்பாலும் ஒரேவிதமான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஓர்அம்சமாகும்.

ஜூலை 2022 இல் ஜனாதிபதியாக ரணில் பதவி ஏற்றுக் கொண்ட பின்னர் பெப்ரவரி 04, 2023 சுதந்திரத்துக்கு முன்னர் 13 ஆம் சட்ட திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படும் என சூளுரைத்தார். ஆனால் இரண்டு ஆண்டுகளாக அதனை அவர் செய்யவில்லை. அவர் மீதுள்ள நம்பகத்தன்மை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பிரேமதாஸ புதிய அரசலமைப்பு நிறைவேற்றப்படும் வரை 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்படமாட்டா, அதற்குப் பதிலாக மாகாண மட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் பலப்படுத்தப்படும் என்றும் வாக்குறுதியளித்திருக்கிறார். மாகாண சபைகளுக்கான தேர்தல் 6 மாதங்களுக்குள் நடைபெறும் எனவும் வாக்குறுதி அளித்துள்ளார்.

வழக்கத்துக்கு மாறாக இந்தத் தேர்தல் மும்முனைப் போட்டியாக மாறியுள்ளது. எந்த வேட்பாளருக்கும் 50 வீதம் + 01 வாக்குகள் கிடைக்கமாட்டா. எனவே தமிழ்மக்களுடைய பேரம் பேசும் சக்தி முன்னெப்போதையும் விட இந்தத் தேர்தலலில் அதிகரித்துள்ளது.

இந்தத் தேர்தல் தமிழ்மக்களின் அரசியல் வாழ்வையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது என்பதைத் தமிழ்மக்கள் உணர வேண்டும்.

எனவே தமிழ்மக்களுடைய ஒற்றுமையை குலைக்கும் பொருட்டும் அவர்களுடைய பலத்தைக் குறைக்கும் பொடுட்டும் ‘தேசியம்’, ‘திரட்சி’ என்ற போர்வையில் தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு களம் இறங்கியுள்ளது. தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட பலர் இதில் இடம் பிடித்துள்ளார்கள். தமிழினத்தின் ஒற்றுமையை இவர்கள் உளமார விரும்பியிருந்தால் தமிழரசுக் கட்சியுடன் பேசியிருக்க வேண்டும். அதை விடுத்து தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பா. அரியநேத்திரனை கடத்தி வந்துள்ளது.

குறிப்பாகத் தமிழரசுக் கட்சியை உடைத்து, அதனை பலவீனப்படுத்தி, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் கதிரைகளை பிடிக்கிற தந்திரமே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டதற்கு உண்மையான காரணமாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் இவர்கள் சர்வதேசத்துக்கும் தென்னிலங்கைக்கும் ஒரு செய்தி சொல்லப் போகிறார்களாம். தமிழ்மக்கள் இனிமேலும் தென்னிலங்கை அரசியல்வாதிகளை நம்பப் போவதில்லை, அவர்கள் தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டார்கள் என்ற செய்திதான் அது. சர்வதேசத்துக்கு கடந்த பல தசாப்தங்களாக அற வழியிலும் மறவழியிலும் அந்தச் செய்தி சொல்லப்பட்டுத்தான் வந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்

(03ஆம் பக்கம் பார்க்க)

# கனடாவில் தாய் பரிதவிக்க 4 வயது மகனை வியட்னாமிற்கு கடத்திச் சென்ற தந்தையார்!








கனடாவில் இருந்து கடந்த ஏழு மாதங்களுக்கு முன்னர் தந்தையால் அழைத்துச் செல்லப்பட்ட சிறுவனை அவரது தாயை தேடி வருகிறார்.

ஹீத்தர் மெக்காத்தர் என்ற பெண் தனது நான்கு வயது மகனை மீளப் பெற முடியவில்லை என அவர் தெரிவிக்கின்றார்.

தங்களது குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் கடைசியாகத் தமது மகனுடன் தாம் விளையாடிக் கொண்டிருந்த பசுமையான நினைவுகளை அவர் மீட்டு கவலை தெரிவிக்கின்றார்.

ஜாக்கப் என்ற சிறுவனையே இவ்வாறு அவனது தாயார் தொலைத்துள்ளார்.

கடந்த ஏழு மாதங்களாகத் தனது பிள்ளையைத் தேடித் தான் அலைகிறார் என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

தனது மகனின் ஓவியங்கள் சுவரை அலங்கரித்து வருவதாகவும் அவரது பொம்மைகள் நாற்காலியில் அமர வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மகன் மிகவும் அன்பானவர் எனவும் மிகவும் சிறந்த பண்புகளை கொண்டவர் எனவும் அவரது தாயார் தெரிவிக்கின்றார்.

இந்த சிறுவனை அவரது தந்தை வியட்நாமுக்கு கடத்திச் சென்றுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி கனடா திரும்ப வேண்டிய தந்தையும் மகனும் அங்கேயே தங்கி விட்டனர் என அவர் தெரிவிக்கின்றார்.

வியட்நாமுக்கு சென்றதன் பின்னர் ஒன்றிரண்டு தடவைகள் தொடர்பு கொண்ட போதும் பின்னர் தொடர்புகள் முழுமையாக துண்டிக்கப்பட்டு விட்டன எனவும் மகனை தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அந்த பெண் தெரிவிக்கின்றார்.

ஜேக்கபின் தந்தையை குறித்த படம் ஒன்றையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

## தமிழரசு காட்டிய...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையில் 2012 ஆம் தொடக்கம் இனச் சிக்கல், போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், பொறுப்புக் கூறல், மீள்நல்லிணக்கம் போன்றவை பேசுபொருளாக மாறி விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இவர்கள் சர்வதேசம் என எதைக் குறிப்பிடுகிறார்கள்? சர்வதேச நாடுகளில் அமெரிக்கா, இந்தியா இந்த இரண்டு நாடுகள்தான் முக்கியமானவை. இந்தியா தெற்காசியாவின் வல்லரசு.

இந்தியா, இலங்கைத் தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கைக் கட்சித் தலைவர்களுடன் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றி பேசு மாறு கேட்கிறது. இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் இம்முறை ஜானாதிபதித் தேர்தலில் அனைவரும் ஒற்றுமையாக, ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதே சிறந்தது என ஆலோசனை வழங்கியுள்ளார். இந்தியா இலங்கையில் நடைபெறும் ஜானாதிபதி தேர்தலில் சஜித் பிரேம தாஸ வெற்றி பெறவேண்டும் என விரும்புகிறது.

இன்றைய உலக ஒழுங்கில் தமிழர் தரப்பு தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் பேசித்தான் இனச் சிக்கலுக்கு தீர்வுகாண வேண்டும். இந்தியா உட்பட சர்வதேசம் நேரடி யாகத் தலையிடாது.

இப்படியான பூகோள அரசியல் மூலோபாயங்களை அரியநேத்திரனும் அவருக்குப் பின்னால் நிற்கும் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பினரும் விளங்கிக் கொள்ள மறுக்கின்றனர். வெண்ணெய் திரண்டு வரும்போது பானையை உடைக்கப் பார்க்கிறார்கள். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைக்கிறார்கள். குறும் தமிழ்த் தேசிய வாதம் பேசி எல்லாவற்றையும் குழப்புகிறார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் சர்வ தேசத்துக்கும் தென்னிலங்கைக்கும் ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்றால் தமிழ்மக்களது வாக்குப் பலத்தில் பாதி ஐந்து லட்சம் ஆவது விழ வேண்டும். ஆனால் கூடிய பட்சம் 20 விழுக்காடு வாக்குகளுக்கு மேல் விழாது. அப்படியென்றால் தேர்தல் முடிவு சொல்லுகிற செய்தி என்ன? தமிழ்மக்கள் தேசியம், தாயகம், சுயாட்சி கோட்பாடுகளை கைவிட்டு விட்டார்கள் என்பதா? இதற்குத்தான் அரியநேத்திரன் ஆசைப் படுகிறாரா?

மீண்டும் சொல்கிறோம். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு போடுகிற ஒவ்வொரு வாக்கும் வீணான வாக்கு ஆகும். கடலில் கரைத்த புளி போன்றது. யானை தனது தலையில் மண்ணை அள்ளிப் போட்டது போன்றதற்கு ஒப்பாகும். தமிழ்மக்கள் தங்கள் பொன் னான வாக்குகளை மண்ணாக்கக் கூடாது.

இலங்கைத் தமிழரசு கட்சி ஆதரவளிக்கும் சஜித் பிரேமதாஸ அவர்களது தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

- என்று கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப. கோரியுள்ளது.




# கனடியச் சந்தையில் இருந்து மீளப் பெறப்படும் யோகட் ரகம்

கனடாவின் சந்தைகளில் இருந்து கிரீக்லான்ட் சிக்னேசர் ரக யோகட் வகைகள் மீளப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ச் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனத்தினால் இது தொடர்பான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கிரிக் யோகட்டின் 24 பக்கட்டுகளைக் கொண்ட யோகட் வகைகளே இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 10 இற்கு முன்னர் பாவனைக்குச் சிறந்தது என்ற குறிப்பீட்டுடன் வந்த பக்கட்டுகளே மீளப் பெறப்படுகின்றன

இந்த உணவு பொருளை விற்பனை செய்யக்கூடாது எனவும் பயன்படுத்தக்கூடாது எனவும் விநியோகம் செய்யக்கூடாது எனவும் கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

அல்பர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, மணிடோபா, நியூ பிரவுன்ஸ்வீக், நியூ பவுண்ட்லாண்ட், நோவா ஸ்கோசியா போன்ற ஆகிய மாகாணங்களில் இந்த வகை யோகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த உணவு வகைகள் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.




## அல்பர்ட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

இறந்த இரண்டு பேரும் அல்டாவின் கன்சோர்ட்டைச் சேர்ந்த ஆண்கள் என்றும் அவர்களில் ஒருவருக்கு 19 வயது, மற்றவருக்கு 17 வயது என்றும் றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டவுன்ஷிப் ரோடு 353 இல் அதிகாலை 1:06 மணிக்கு ஒரு ஒற்றை வாகன விபத்துத் தொடர்பில் அதிகாரிகள் அழைக்கப்பட்டனர் என ஒரு செய்தி வெளியீட்டில், கொரோனேஷன் பகுதியின் றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ் கூறியது. சம்பந்தப்பட்ட வாகனம் டிரக் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஏற்பட்ட காயங்களின் தீவிரத்தை பொலிஸார் வெளிப்படுத்தவில்லை, ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் 'பல்வேறு காயங்களுடன்' சிகிச்சை பெறுகின்றனர் எனக் கூறப்பட்டது. காயமடைந்தவர்கள் அனைவரும் இளைஞர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸின் செய்தித் தொடர்பாளர் குளோபல் நியூஸிடம், இந்த விபத்தில் மதுவின் பங்கு இருக்கலாம் என்று விசாரணையாளர்கள் சந்தேகிக்கிறார்கள் என்று கூறினார்.




# கோயில் குருக்களுடன் கனடாவில் கள்ளத் தொடர்பா? மனைவியை நையப்புடைத்த இலங்கைத் தமிழர் கைது

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் மனைவியை அடித்து தலையில் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இலங்கை தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சியைச் சேர்ந்த 43 வயதான குடும்பஸ்தர் ஒருவரே கைது செய்யப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவி மீது ஏற்பட்ட சந்தேகம் காரணமாகவே இவ்வாறு தாக்குதல் சம்பவம் நடந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒன்றாரியோவில் உள்ள கோவில் ஒன்றின் குருக்களான இந்தியாவைச் சேர்ந்த ஒருவருடன் மனைவி கள்ளத் தொடர்பில் இருக்கின்றார் என ஏற்பட்ட சந்தேகம் சில நாள்களாக அந்தக் குடும்பத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்துள்ளது. இதன் பின்னரே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

அந்த ஆலயத்தின் ஐயர் தங்கியிருந்த இடத்திற்கு மனைவி காரில் சென்று வீடு திரும்பும் போது காரை வழி மறித்து கணவன் மனைவியைக் கடுமையாகத் தாக்கினார் எனவும் காரைச் சேதப்படுத்தினார் எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்த ஒன்றாரியோ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.




# போர்ட் டோவர் அருகே ஐந்து வாகனங்கள் மோதி விபத்து; ஒருவர் பலி; இருவர் காயம்

போர்ட் டோவர் அருகே சனிக்கிழமை பிற்பகல் ஐந்து வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளான போது கிரேட்டர் சட்பரியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இரண்டு நபர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

புளூலைன் சாலை மற்றும் நெடுஞ்சாலை 6 சந்திப்பிற்கு அருகே ஏற்பட்ட இந்த மோதலில், மூன்று மோட்டார் சைக்கிள்கள், ஒரு பிக்கப் டிரக் மற்றும் ஒரு SUV வாகனம் ஆகியன விபத்துக்குள்ளாகின என்று ஒன்ராறியோ மாகாண பொலிஸ் துறை நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த 33 வயதான சட்பரி குடியிருப்பாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றின் சாரதி பலத்த காயம் அடைந்து காயம் அடைந்து சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

இரண்டாவது மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் லேசான காயம் அடைந்து உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.




காரில் இருந்த மற்ற 4 பேருக்கு காயம் ஏற்படவில்லை.

விபத்தில் சிக்கியவர்களின் பெயர்கள், வயது அல்லது பிற அடையாள விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.




# மனநலப் பாதிப்பு, போதைப் பழக்கம் உள்ளவர்களுக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவில் அதிக பாதுகாப்பு வசதிகள்

## மாகாணப் பிரதமர் டேவிட் எபி அறிவிப்பு

மனநலம் மற்றும் போதைப் பழக்கம் உள்ளவர்களுக்கான தன்னிச்சையான கவனிப்பை விரிவுபடுத்துவதாகவும், மாகாணம் முழுவதும் மனநலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு 'அதிக பாதுகாப்பான' வசதிகளைத் திறப்பதாகவும் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் மாகாணம் முழுவதும் உள்ள பிராந்திய ரீதியான சீர்திருத்த வசதிகளில் மனநலப் பிரிவுகளைத் திறக்கும், அத்துடன் மனநலத் தேவைகள் உள்ளவர்களுக்கு நீண்டகால பராமரிப்பு மற்றும் வீட்டுவசதி வழங்கும் என்று மாகாணப் பிரதமர் டேவிட் எபி ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

மாகாணத்தின் படி, முதல் பிரத்யேக மனநலப் பிரிவு சர்ரே ப்ரீட்ரியல் மையத்தில் அமைக்கப்படும். முதல் பிராந்திய மனநல வசதி மேப்பிள் ரிட்ஜில் உள்ள Alouette சீர்திருத்த மையத்தின் மைதானத்தில் கட்டப்படும்.

# கனடாவில் பணவீக்கம் மேலும் குறைகின்றது!




கனடாவின் பண வீக்கம் தொடர்பில் மகிழ்ச்சியான செய்தி வெளியிடப்பட உள்ளது.

இதுதொடர்பில் மகிழ்ச்சியான எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் இப்போது பணவீக்கமானது 2.1 வீதம் அளவில் குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதத்திற்கான பணவீக்கமே இவ்வாறு வீழ்ச்சி அடைந்திருக்கும் என எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

கனடியப் புள்ளிவிவரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை நாளை செவ்வாய்க்கிழமை வெளியிட உள்ளது.

கடந்த ஜூலை மாதம் வருடாந்த பணவீக்க வீதம் 2.5 ஆக காணப்பட்டது.

இந்த பணவீக்கமானது ஆகஸ்ட் மாதத்தில் 2.1 வீதமாக வீழ்ச்சி அடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பொருளியல் நிபுணர்களின் இந்த எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் நகர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. பணவீக்க வீதம் குறைவடையும் சந்தர்ப்பத்தில் வட்டி விகிதங்களை மேலும் குறைக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



# தேனிக் கொலனிகளை அழிக்கும் இரசாயனங்கள் பற்றி முறைப்பாடு

ஜூன் மாதம், வடக்கு ஒன்டாரியோவின் கிரேட்டர் சட்பரி பகுதியைச் சேர்ந்த தேனீ வளர்ப்பவர் ஒருவர் தனது தேனீ கொலனியில் பாதியை - சுமார் 1.5 மில்லியன் தேனீக்களை - கிருமிநாசினிகளான இரசாயனப் பொருள்களினால் இழந்த கதையை வெளிப்படுத்தியிருந்தார்.

இப்போது, குயெல்ஃப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் உணவு ஆய்வகத்தின் சோதனை அது உண்மை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

“இன்றோ, நாளையோ, இந்த நிறுவனங்கள் வந்து குடியிருப்புப் பகுதிகளுக்குள், எனது பிரதேசத்தின் மூன்று மைல்களுக்குள் எங்காவது அதே இரசாயனத்தைத் தெளித்தால், அது ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இருந்ததைப் போல என் தேனீ கொலனியைப் பறி கொடுக்கும் இன்னொரு நாளாக இருக்கும் என்று நான் இன்னும் பயப்படுகிறேன். அது நிற்காது,” என்று தேனீ வளர்ப்பவர் டான் லலோண்டே கூறினார்.

“இது ஒன்று மட்டுமல்ல, இது ஒரு நிறுவனம் மட்டுமல்ல என்பதை நான் அறிவேன். மேலும் இந்த தயாரிப்புகளை சரியாகப் பயன்படுத்தினால், எங்கள் உணவு ஆதாரங்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பாகச் செய்ய முடியும். துரதிர்ஷ்டவசமாக, என் கருத்து, இது எனது கருத்து, ஒப்பனை பச்சை புல்வெளிகள் வடக்கின் புதிய ஒற்றை கலாச்சாரம் தவிர இது ஒரு உணவு ஆதாரம் அல்ல.” - என்றார்.







# 90 ஆண்டுகளுக்கு முன் தந்தை உருவாக்கிய விமானத்தை நேரில் பார்வையிட்ட மகள்மார்

கனடாவில் 90 ஆண்டுகளுக்கு முன்னர் தமது தந்தையினால் உருவாக்கப்பட்ட விமானத்தை அவரது இரண்டு மகள்களும் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

ஒன்றாரியோவின் குயிலெப் பகுதியில் இந்த விமானத்தை அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

ரோபட்டா லுயோ மற்றும் அவிலின் சுயி வொங் ஆகிய இருவரும் தமது தந்தை 90 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கிய விமானத்தை நேரில் பார்வையிட்டுள்ளனர்.

1935 ஆம் ஆண்டு ராபர்ட் மற்றும் டொமி வொங் ஆகிய சகோதரர்களினால் தங்களது பதின்ம வயதில் விமானம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

சஞ்சிகை ஒன்றில் காணப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த விமானம் உருவாக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வாங்குவார் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இந்த இரண்டு சகோதரர்களும் விமானத்தை தயாரித்திருந்தனர்.

இந்த விமான தயாரிப்பு ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் மிகப்பெரிய ஓர் அனுபவமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானி அனுமதி கிடைப்பதற்கு முன்னதாகவே ராபர்ட் விமானத்தை உருவாக்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராபர்ட் மற்றும் டொமி ஆகியோர் சென்ட்ரல் ஏர்வேஸ் நிறுவனத்தை உருவாக்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அவரது மகள்கள் தற்பொழுது தங்களது தந்தையாரின் விமான உற்பத்தியை நேரில் பார்வையிட்டுள்ளனர்.


# தாயைப் படுகொலை செய்த மகன் ஓராண்டின் பின் கைது

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் காம்ப்லூஸ் பகுதியில் காணாமல் போய், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலையாளி ஒரு ஆண்டுக்குப் பின் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணை அவரது மகன் படுகொலை செய்துள்ளார் என்ச் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அதன் அடிப்படையில் அந்த நபரை பொலிசெ கைது செய்துள்ளனர்.

57 வயதான ஜோ-அன்னே டோனோவன் என்ற பெண் கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் காணாமல் போயிருந்தார். ஒரு வாரத்தின் பின்னர் அந்தெ பெண் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.



இந்த பெண்ணின் மரணம் தொடர்பில் மர்மம் நீடித்து வந்த நிலையில் கனடிய பொலிஸார் அந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுத்தனர்.

இதன் அடிப்படையில் அந்தெ பெண்ணின் மகனான 35 வயது உடைய பிராண்டன் ஜெரமியோ டோனோவன் என்ற நபர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அந்த நபரை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதனால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கட்டார் மன்னர் கனடா விஜயம்

கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி இந்த வாரம் கடாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.


இரண்டு நாள் பயணமாக அவர் கடாவிற்கு வருகை தருவார் எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி தனது முதல் அதிகாரபபூர்வ கனடா விஜயத்தின் போது, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை சந்திக்க உள்ளார்.

காஸா, ஆப்கானிஸ்தான் மற்றும் உக்ரைனில் நிலவும் நிலைவரங்கள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் காசாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பல மாதங்களாக முயற்சித்து வருகின்றன.

அல் தானியின் வருகை வர்த்தகம் மற்றும் முதலீடு களை அதிகரிப்பது உள்ளிட்ட பிற முன்னுரிமைகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்பாக அமையும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



# சக்தி வாய்ந்த இரு நிலஅதிர்வுகள் பிரிட்டிஷ் கொலம்பியாவில் பதிவு!

கனடாவில் சக்தி வாய்ந்த இரு நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்த நிலநடுக்கங்கள் பதிவாயுள்ளன என தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

முதலாவது நிலஅதிர்வு 6.5 மெக்னி டியுட் அளவில் ஹைடா க்வாய், வான்கூவருக்கு வடக்கே சுமார் 1,720 கிலோமீற்றர் தொலைவில் 33 கிலோ மீற்றர் ஆழத்தில் பதிவாகியுள்ளது.

மற்றுமொரு நிலஅதிர்வு அதே பகுதியில் அரை மணி நேரத்திற்குப் பின்னர் 4.5 மெக்னிடியுட் அளவில் பதிவாகியுள்ளது.

இந்த நிலஅதிர்வுகளால் அப்பகுதி யிலுள்ள கட்டிடங்கள் சில குலுங்கி யமையைத் தொடர்ந்து மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எவ்வாறாயினும் சுனாமி எச் சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை யென தெரிவிக்கப்பட்டுள்ளது.